## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 63/2020 | Date : 19.10.2023 | DW1 |
|---|---|---|
| Name: கோகுல் சந்தோஷ் | S/o. செல்வராஜ் | |
| Evidence Recorded Time: 03.16 P.M. to 04.45 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வழக்கு சொத்தை யாரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன் என்றால் நசூன், ஜரினா (2, 3 பிரதிவாதிகள்) விடமிருந்து கிரையம் பெற்றேன். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கினேன் என்றால் ரூ.8,65,000/-ற்கு கிரையம் வாங்கினேன். அதில் யார் யாருக்கு பங்கு உள்ளது என்றால் நான் கிரயம் வாங்கிய இரு நபர்கள் மற்றும் ஷகிலா என்பவருக்கும் பங்கு உள்ளது. நசூன், ஜரினா, ஷகிலா ஆகிய மூவரும் தங்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் சொத்து பொதுவில்தான் உள்ளது. நான் பொதுவில் கண்டு கிரயம் வாங்கினேனா இல்லை செக்கு பந்தி கண்டு கிரையம் வாங்கினேனா என்றால் பொதுவில் 2 பாகம் கிரையம் வாங்கினேன். நசூன், ஜரினா, ஷகிலா ஆகிய மூவரும் பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் அது தவறாகும். நசூன், ஜரினா, ஷகிலா மூன்று பேருக்கு பாத்தியப்பட்ட பொது சொத்திற்கு வடக்கு மற்றும், கிழக்கு பக்கத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் அவ்வாறு இல்லை, கிழக்கு பக்கத்தில் வாதி நிலமும், வடக்கு பக்கத்தில் வாதியின் தாயார் நிலமும் உள்ளது. வாதி நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு இணை சொத்துக்காரர் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்து வழியாக ஒரு ஐந்தடி தடம், கிணற்றிற்கு செல்வதற்கும், அதில் பைப் லைனும் செல்கிறது என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய சொத்தில் தான் கிணறு உள்ளது என்றால் உள்ளது. நான் கிரையம் வாங்கிய சொத்தை பொறுத்து பாகம் பிரித்து தர இன்று வரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை, மற்றொரு பங்கையும் ஷகிலா எனக்கே விற்பனை செய்வதாக சொன்னதால் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யவில்லை. ஷகிலா கடைசி நேரத்தில் வாதியின் பேச்சை கேட்டுக்கொண்டு எனக்கு கிரையம் கொடுக்கவில்லை

என்று கூறியுள்ளது உண்மையா என்றால் உண்மைதான். வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பில் எவ்வளவு ரூபாய்க்கு சொத்தை கிரையம் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருந்தார் என்றால் எனக்கு நினைவில்லை. ரூ.8,65,000/- பணத்தை நான் பெற்றுக்கொண்டு வாதி பெயருக்கு கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என்றுதான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் அறிவிப்பு அனுப்பினார், தொகை நினைவில்லை. சாட்சி அறிவிப்பை பெற்று படித்து பார்த்து அதில் ரூ.8,65,000/- கிரைய தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறுகிறார். வாதி நான் கிரையம் பெற்ற தொகையைவிட குறைந்த தொகைக்கு தாவா சொத்தை என்னிடம் கிரையம் கேட்கவில்லை என்றால் சரிதான். நானும் தாவா சொத்தை குறைந்த விலைக்கு வாங்கவில்லை என்றால் சரிதான். ஒரு சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருப்பது அந்த சொத்திற்கு வில்லங்கத்தை ஏற்படுத்துமா என்றால் ஏற்படுத்தும். கிரையம் வாங்கிய சொத்து சம்மந்தமாக இரண்டு வழக்குள் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்கள்.78/2019, 18/2019 ஆகிய வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது வில்லங்க சான்றை பார்த்து வாங்கினேன். சொத்து குறித்த வழக்கு நிலுவையில் இருப்பது வில்லங்கத்தில் வராது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி இரண்டு வழக்குகளும் நிலுவையில் இருக்கும் விவரம் எப்போது தெரியும் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு வந்தபோதுதான் தெரியும். அசல் வழக்கு எண்.18/2019 ஐ வழக்கை நசூன் மற்றும் ஜரினா ஆகிய இருவரும் ஷகிலா மீது தாக்கல் செய்த பாகப்பிரிவு வழக்கு என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.18/2019 நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருப்பது தெரிந்து கிரையம் வாங்கினேனா அல்லது வழக்கு நிலுவையில் இருக்கும் விவரத்தை 2, 3 பிரதிவாதிகள் என்னை ஏமாற்றி விற்பனை செய்தார்களா என்றால் வழக்கு நிலுவையில் இருக்கும் விவரம் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கும் போது சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருக்கிறதா என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் 2, 3 பிரதிவாதிகள் சொல்லவில்லை. வழக்கு நிலுவையில் இருக்கும் விவரத்தை சொல்லியிருந்தால் நான் சொத்தை கிரையம் பெற்றிருப்பேனா என்றால் வாங்கியிருக்கமாட்டேன். அசல் வழக்கு எண்.18/2019 வழக்கில் வாதி தன்னையும் ஒரு தரப்பினராக

சேர்த்துகொள்ளவேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு அனுமதிக்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு எண்.18/2019 வழக்கை 2, 3 பிரதிவாதிகள் நடத்தாமல் விட்டுவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு வழக்குகள் பற்றிய விவரங்களை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வழக்கில் உள்ள சொத்தை என்னை ஏமாற்றி விற்பனை செய்துவிட்டார்கள் என்று 2, 3 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அறிவிப்பு அனுப்பவில்லை, வழக்கை திரும்ப பெற்றதாக சொன்னார்கள். நான் கிரையம் பெற்ற பிறகு எத்தனை நாட்கள் கழித்து 2, 3 பிரதிவாதிகள் வழக்கை திரும்ப பெற்றார்கள் என்றால் நாட்கள் தெரியாது, வாபஸ் பெற்று என்னிடம் ஆவணத்தை ஒப்படைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் அந்த ஆவணம்தான் 2, 3 பிரதிவாதிகள் ஒப்படைத்ததா என்றால் அந்த ஆவணம்தானா என்று நினைவில்லை என்று சாட்சி கூறுகிறார். எனக்கு கிரையம் கொடுத்த கிரையதாரர்கள் வழக்கை வாபஸ் பெற்று என்னிடம் ஒப்படைத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கிற்கும் அந்த ஆவணத்திற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2, 3 பிரதிவாதிகள் அவர்களது பாகத்தை விற்பனை செய்துவிட்டார்கள் என்றுதான் சொல்லியுள்ளார்கள் என்றாலும், யாருக்கு எப்போது விற்பனை செய்தார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றாலும் சரிதான். அசல் வழக்கு எண்.18/2019 இரண்டு சொத்துக்கள் சம்மந்தப்பட்ட வழக்கு என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்தில் ஒரு சொத்தில் உள்ள 2/3 பாகத்தை தான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். இரண்டு சொத்துக்களையும் என் கிரையதாரர்கள் எனக்கு விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ..3 ஆவணத்தில் என்ன சொத்தை விற்பனை செய்து விட்டோம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 06.11.2019–ம் தேதியில் தான் வா.சா.ஆ.3 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கி எத்தனை மாதங்கள் கழித்து வா.சா.ஆ–3 ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் 6 மாதங்கள் கழித்துதான் தாக்கல் செய்யப்பட்டது. வாதி சொத்தை கிரையம் கேட்ட பிறகு நான் கிரையம் செய்து

கொடுக்க விரும்பவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய பிறகு வாதி என்னிடம் எப்போது கிரையம் கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பேனா என்றால் கிரையம் வாங்கிய பிறகு கேட்டால் கொடுக்கமாட்டேன். என்னுடைய பதில் அறிவிப்பிலும், முதல் விசாரணையிலும் ரூ.8,65,000/—ற்கு கிரையம் வாங்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. நான் கிரையம் பெறுவதற்கு முன்பு இந்த வழக்கு சொத்திற்கு அருகில் எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. ஆக வழக்கை சொத்திற்கு அருகாமை சொத்துக்காரர் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் அருகாமை சொத்துக்காரர் இல்லை, அருகாமையில் உள்ள குவாரிக்கு குத்தகைக்கு எடுத்துள்ளேன். அந்த குவாரிக்கு நான் உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். தற்போது குவாரி செயல்பட்டு வருகிறதா என்றால் இல்லை. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக செயல்படவில்லை. ஏன் செயல்படவில்லை என்றால் வனத்துறைக்கு அருகாமையில் இத்தனை மீட்டர் தொலைவிற்குள் குவாரி இருந்ததால் பிரச்சனை ஏற்பட்டு செயல்படவில்லை. நான் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக நான் கனிமங்களை எடுத்தற்காக எனக்கு அபராதம் விதிக்கப்பட்டது என்றால் இல்லை, என் அப்பாவிற்குதான் விதிக்கப்பட்டது. நானும், என் அப்பாவும் சேர்ந்துதான் குவாரியை நடத்தி வந்ததாக இந்த வழக்கில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வனத்துறை பிரச்சனை சம்மந்தமாக குவாரி செயல்படுவதில்லை என்று சொல்வது பொய் என்றாலும், அபராதம் விதிக்கப்பட்டதால்தான் குவாரி செயல்படவில்லை என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரைய பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்ட நபர் சையத் பசீர் என்பவர் நசூனின் கணவர் என்றால் சரிதான். மற்றொரு சாட்சியான முகமது ரபி என்பவர் ஜரினாவின் மகன் என்றால் சரிதான். மேற்படி இருவரும் தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் இருப்பவர்கள் அல்ல என்றால் சரிதான். உள்ளூரில் இருந்த நபர்களை கிரைய பத்திரத்தில் நான் சாட்சியாக வைக்கவில்லை என்றால் சரிதான். கிரையத்தை ரகசியமாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 கிரையம் வாங்கியது விவசாய நிலம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 ல் கிரைய பத்திரத்தில் 6 வது பக்கத்தில் சொத்து விவரம் என காட்டப்படும் பகுதியில் இருந்து இரண்டு வரிக்கு முன்பு " இந்த படிக்கு எங்கள் சம்மதியில் எழுதிக்கொடுத்த வீட்டிற்குரிய காலி இடத்தின் சுத்த கிரைய சாசனம்" என்று காணப்படுகிறது என்றால்

சரிதான். விவசாய நிலமா காலி நிலமா என்றால் விவசாய நிலம்தான். நான் கிரைய பத்திரத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். விவசாய நிலத்தை காலி மனை என பத்திரம் எழுதி பதிவு செய்யவேண்டிய அவசியம் என்ன என்றால் அதனை நான் சரியாக கவனிக்கவில்லை. கிரைய பத்திரத்தில் நான் மேற்படி சொத்தை குத்தகைக்கு எடுத்து ஓட்டி வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் ஐந்தாவது பக்கத்தில் 2 வது வரியில் நாங்கள் சர்வ சுதந்திரமாயும், நிராட்சேபனையாயும் ஆண்டு அனுபவித்து வருகின்ற சொத்தை கிரையம் செய்து கொடுத்ததாக வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். அதே 5 வது பக்கத்தில் கடைசி வரியில் கிரையம் தொகையினை பெற்றுக்கொண்டு சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். நான் சுவாதீனத்தில் குத்தகைதாரராக இருந்து கிரையம் பெறுவது சம்மந்தமாக அதை பொறுத்து ஆட்சேபிக்கவில்லை என்றால் ஆட்சேபிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 கிரைய பத்திரத்தில் தடம், உத்தி, வாய்க்கால், பைப் லைன் குறிப்பாக எங்கிருந்து எங்கு வருகிறது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் நானும், என் தகப்பனாரும் 1995–லிருந்து குத்தகைக்கு எடுத்து ஓட்டியதாக காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் நான் குத்தகைக்கு ஓட்டவில்லை. 1995–ல் எனக்கு எவ்வளவு வயது என்றால் 3 வயது. அதே அறிவிப்பில் சோட்டா சாகிபு 13.08.2002 ல் இறந்த பிறகு நானும், எனது தகப்பனாரும் குத்தகைக்கு எடுத்து ஓட்டியதாக காணப்படுகிறது என்றால் சரிதான், அப்போதும் நான் இளவர் என்றால் சரிதான். அதே அறிவிப்பு பாரா 4–ல் நசூன், ஜரினா, ஷகிலா ஆகியோருக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சி செட்யூல் சொத்துக்களை தங்களுக்குள் பாகம் பிரித்து சர்வேயர் வைத்து அளந்து தனித்தனியாக அனுபவம் செய்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அறிவிப்பில் உள்ள விவரம் தான் தவறு, பத்திரத்தில் உள்ள விவரம் தவறு இல்லை. நானோ என் அப்பாவோ குத்தகைக்கு ஓட்டி வந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அடங்கல் பதிவேட்டில் நிலத்தை யார் குத்தகைக்கு ஓட்டி வரும் விவரம் இருக்கும் என்றால் சரிதான். அடங்கல் பதிவேட்டை பெற்று நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் உள்ள விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன்.

எதிர் வழக்குரையில் 7 வது பத்தியில் "சோட்டா சாயுபு உயிருடன் இருந்த காலத்திலேயே அவருக்கு ஆவண எண்.90/1994-ன் படிக்கு பாகமாக பிரிந்த ஏ செட்யூல் சொத்துக்களை இப்பிரதிவாதிகள் கடந்த 1995-ம் ஆண்டிலிருந்து அவரிடமிருந்து குத்தகைக்கு பெற்று தற்போது வரையிலும் அனுபவத்தில் இருந்து குத்தைக்கு ஓட்டிக்கொண்டுள்ளார்கள்" என்று சொல்லியுள்ளது சரியா என்றால் நான் ஓட்டியதாக சொல்வது தவறு, என் அப்பாதான் ஓட்டி வந்தார். 01.12.2020-ல் எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கி ஒரு வருடம் 7 மாதம் கழித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நிரூபண பிரமாண பத்திரத்தித்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். நிரூபண பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகளை யார் சொன்னது என்றால் நானும், என் அப்பாவும் சொன்னோம். என்னுடைய அறிவிப்பிலும், எதிர் வழக்குரையிலும் குத்தகைக்கு நான் ஓட்டி வந்ததாக தவறாக சொல்லியுள்ளதை பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிர் வழக்குரையில் தவறான சங்கதிகளை கொடுத்தது தொடர்பாக அதனை திருத்த நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.